22

உ

சுந்தரமகாலிங்க சுவாமி துணை.

# சதுரகிரி மான்மியம்.

மதுரை வித்வான்,
த. குப்புசாமி நாயுடு அவர்களால்
இயற்றியது

---

சதுரகிரி மகாலிங்கசுவாமி தேவஸ்தானம் மானேஜர்
K. கந்தசாமியா பிள்ளை அவர்கள்,
விருப்பத்தின்படி,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்
[illegible]சாமிக்கோனாரவர்களாற் மது[illegible]
[illegible]ச்சந்திர விலாசம் பிரஸில்
[illegible]கப்பெற்றது.
[illegible]920.

4 - OCT 1920
923:38.21195SA

உ

சிவமயம்.



சுந்தரமகாலிங்க சுவாமி.

ஸ்ரீ சுந்தரமகாலிங்கஸ்வாமி து...



OFFI... 4-OCT ... ADRAS
172905
172905

# சதுரகிரி மான்மியம்.

(1) செந்தமிழ் மன்னரிற் சிறப்புற்ற பாண்டியன் ராஜதானியாகிய மதுரைக்குத் தென்மேற்கின் கண்ணுள்ள கிரிகளில் கிழக்கே இந்திரகிரி தெற்கே எமகிரி மேற்கே வருணகிரி வடக்கே குபேரகிரி யென்கிற இந்நான்கு கிரியின் மத்தியிலுள்ள கயிலாசகிரி சித்தகிரி பிர்மகிரி விஷ்ணுகிரி யெனப் பெயர்பெற்ற கிரிகளிருப்பதால் சதுரகிரியெனப்பெயர்பூண்டது.

(2) இதன்கீழ்ப்பக்கதில் எமபுரமென்றோரிட ...ண்டு இம்மலையில் அகஸ்தியர் தூர்வாசர் புஜண் ...கர் வஜிஷ்டர் சுந்தரானந்தர் சட்டைநாதர் நந்தி ...வரர் போகர் கொங்கணர் ரோமர் மச்சர் தன்வந் ...திருமூலர் காலாங்கி இராமதேவர் கோரக்கர் மிரு

...ற பதினெண்சித்தர்களும் அநேக முனிவர்களும் நித்திய வாசஞ் செய்கின்றனர்.

(3) உத்தம பர்வதங்களினம்சம் பெற்றமையாலும் உத்தம தேவாலயங்களிருப்பதினாலும் சிறப்புற்ற சித்தர்களும் முனிவர்களும் யோகிகளும் வசிக்கும் வனங்களும் குகைகளும் குவடுகளும் பல காணுதலாலும் இம்மலை சமஸ்தமான புண்ணிய ஸ்தலங்களிலும் மேலான புண்ணியஸ்தலமாகச் சொல்லுகிறார்கள்.

(4) இக்கிரியில் மும்மூர்த்திகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் வசிப்பதால் சமஸ்தமான புண்ணியநதிகளும் புண்ணிய தீர்த்தங்களும் இங்கு உற்பத்தியாயிருக்கின்றனவென்றும் இம்மலைக்குச் சென்று இத்தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தவர்கள் வேறு புண்ணிய தீர்த்தங்களுக்குப் போக வேண்டியதில்லை யென்று புராண மூலமாய்த் தெரியவருகிறது.

2905

(5) மேலுங் கருடன் அடிமையை நீக்கி... தேவாமிர்தங்கொண்டு போகும்பொழுது ... அவ்வமுதத் துளிகள் சிந்தியதால் அமு...

172905

சீவிப் பூண்டுகள் உண்டாயிற்றென்றும் அதனால்தான் இதில் வாசஞ் செய்பவர்கள் நோயற்ற வாழ்வையடைந்தார்களென்றும் ஆனது பற்றி இதற்கு சஞ்சீவிமலையென்றும் ஓர் பெயர் வழங்கி வருகிறது.

(6) இம்மலையில் எழுந்தருளி யிருக்கும் சாக்ஷாத் பரமசிவன் சித்தர்களோடு திருவிளையாடல் செய்யக் கருதி, ஒரு நாள் பசுவின் முலையில் வாயை வைத்து சுந்தரானந்த சித்தருடன் பால் பருகினர், அது அப்பசு மேய்க்கும் இடையனால் கண்டு பிடிக்கப்பட்டு அவனுக்கு சாரூபம் அளித்து, இருவரும் லிங்க சொரூப முற்றனர். அது தெரிந்த காலாங்கிமகாரிஷி அவ்லிங்கத்திற்கு காவலாக மலையாளங் கருப்பணசுவாமியை பலாமரத்தடியிலும் ஷை யூர் பேச்சியம்மனை ஷை கருப்பணசுவாமிக்கு இடப்பாகமுமாக ஏற்படுத்தியதோடு தான் செய்யும் வகாரத்திரவியத் திற்கும், தயிலக்கிணற்றுக்கும், அத்தெய்வங்களையே, வலாக்கின ரென்றுங் கூறுகின்றனர்.

(7) இங்ஙனம் இக்கிரியில் மகாலிங்கம் சுந்த லிங்கம் பலாவடிக்கருப்பணன் மஞ்சனைப்பேச்சி, இக் ல்வரும், இக்கலிகாலத்திலும் பிரத்தியக்ஷ தேவதை

யாயின ரென்பதைக் கேள்வியுற்ற மானிடர் அக்கிரிக்குச் சென்று தெரிசித்தினர் யெனவும், அங்ஙனம் தரிசித்தவர்களுடைய வாய் மொழியால் கருமத்தாலுண்டானதும், எம்மருந்தாலும் தீராததுமாகிய, பித்து மலடு ஊமை மூடம் பேய் கூன் குருடு செவிடு முதலிய நோய்களை உடையவர்கள் இக்கிரிக்கு வந்து தெரிசிக்க அவரவர் நோய்களைப் போக்கியும் யார் யார் எவை எவை விரும்புகின்றார்களோ அவர்களுக்கு அப்படியப்படியே பூர்த்தி பண்ணிக்கொடுத்தும் மகிமை பெற்றதெனவும், இவ்விஷயந் தெரிந்த பின்பு மிகுதியான ஜனங்கள் இம்மலைக்கு வந்து சுவாமி தெரிசனை செய்து இகபர சாதனங்களை யடைந்தன ரெனவும் சொல்லுகிறார்கள்.

(8) இவ்வாறு வரமும் சுகமும் பெற்றவரனைவரும் ஷை சுவாமிகளுக்குத் தாம், பிரார்த்தித்துக் கொண்டபடி ஆராச்சி மணிகளும், பருப்பெரிய கு... து விளக்குகளும் சரதீபங்களும் நட்க்ஷத்திர தீபமு... தளிகைக்கு வேண்டிய அண்டாக்களும் பெரிய ... கிணிகளும் அபிஷேகத் தீர்த்தங் கொண்டு வருவதற்... றிய குடங்களும் தங்கத்தாலும், இரத்தினத்தாலும்...

செய்த கிரீடங்களும், முத்துமாலை, மோகனமாலை, காசமாலை, ஜெபமாலை பதக்கங்கள், கண்மலர், நெற்றிப் பட்டம், சிலம்பு, தண்டை, முதலியவைகளும், பட்டுவஸ்திரங்களும், பிள்ளைத் தொட்டில்களும், கொண்டு வந்து சமர்ப்பித்திருக்கிறார்கள்.

(9) இக்கோவிலுக்கு பூசைக்குப் போதுமான விளைச்சல் விளையக்கூடிய நிலங்களும் பக்தஜனங்கள் வாங்கி விட்டிருக்கிறார்கள்.

(10) முன்பு மகரிஷிகளால் பனிரெண்டு மாத அமாவாசைகளிலும் ஆடியமாவாசை மிகச் சிறந்ததென்று ஷை மகோற்சவம் நடத்தினது போலவே இக்காலத்திலும் இம்மகோற்சவத்தை சிறப்பாக நடத்துகிறார்கள். இம் மகோற்சவத்தில் சுந்தரமகாலிங்கத்திற்கு ஷை உற்சவந்தொடங்கி முடிவு பெறுகிற வரை அநுதினமும் முப்பத்திரண்டு அபிஷேகமும் மகாபூஜையும் முப்பழப் பூஜையும் தேவபூஜையும் விமரிசையாய் நடந்து வருகிறது. இம்மூன்று நாளும் பலாவடிகருப்பணனுக்கும் மஞ்சனைப் பேச்சிக்கும் பிரார்த்தனைக்காரர்கள் ஆயிரக்கணக்கான மறிப்பலி சேலுற்

பெலி யிடுதலும் பொங்கலிடுதலும் செய்கிறார்கள் ஷை சுந்தரமகாலிங்க சுவாமிக்கு பிரார்த்தனைப்படி மொட்டையிடுகிறார்கள்.

(11) ஆவணி மாதம் மூலநட்க்ஷத்திரத்தன்று விசேஷ அபிஷேகமும் விஷேச பூஜைகளும் விமரிசையாய் நடக்கிறது. இதற்கு அநேக பெரியோர்கள்வந்து சுவாமிதெரிசனஞ் செய்கிறார்கள்.

(12) புரட்டாசி மாதம் நவராத்திரி உற்சவம் ஆரம்ப தினத்திற்கு முன்பே காப்புக்கட்டி பாலிகை வைத்து, ஆனந்தவல்லியம்மன் பூஜையும், கடைசி நாளில் சரஸ்வதி பூஜையும், விசேஷ அபிஷேகங்களும் விசேஷ பூசைகளும், பத்து நாளும் வெகு விமரிசையாய் நடைபெருகிறது. இத்திருவிழாவிலும் பிரார்த்தனைக்காரர்கள் ஷை ஆடி யுற்சவத்தைப் போலவே பலி பொங்கல் மொட்டை யிடுதல் யிவைகளை நடத்துகிறார்கள் இவ்வுற்சவத்தில் ஏழூர் சாலியர்கள் பிரார்த்தனைக்காக குடங்குடமாக யெண்ணை கொண்டு வந்து சமர்ப்பிவிக்கிறார்கள்.

(13) ஐப்பிசி மாதம் தீபாவளிப் பண்டிகை யன்று, விசேஷமான அபிஷேகங்களும் பூஜைகளும் நடந்து வருகிறது உற்சவத்திற்கு வருபவர்கள் ஷ்டி சுவாமிகளுக்கு பட்டு பட்டாவளிகள் வாங்கி சமர்ப்பி க்கிறார்கள்.

172905

(14) கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை யன்று லட்சதீபமும் சொக்கப்பனையும் நடக்கிறது வெல்லப்பாகு கலந்த பொரியும் வடைத் திருப்பணி யாரமும் அப்பமும் பிரார்த்தனைக் காரர்கள் செய்யச் சொல்லி சுந்தரமகாலிங்க சுவாமிக்கு நிவேதனஞ் செய்வதோடு தீபத்திற்கு நெய், நல்லெண்ணை, விளக்கெண்ணை, குடங்குடமாக கொண்டு வந்து கொடுத்து தெரிசனஞ் செய்கிறார்கள்.

(15) மார்கழி மாசம் முதற்றேதி முதல் மூப் து தேதி வரை திருப்பள்ளி யெழுச்சிக்காக வெண் பாங்கலும் விசேஷமான பூஜையும் நடத்துவதோடு ண்ணைக் காப்பு உத்சவமும் நடத்துகிறார்கள் இத பிரார்த்தனைக்காரர்கள் சுவாமிக்கு சாத்துவதற்கு னைத் தயிலங்கள் கொண்டு வந்து சமாப்பிக்கி

(16) தை மாசம் சங்கராந்தியன்று மிகுந்த அபிஷேகமும் பூஜையும் நடத்துகிறார்கள். இதற்கு பிரார்த்தனைக்காரர்கள் சர்க்கரைப் பொங்கல் செய்து நிவேதனஞ் செய்கிறார்கள்.

(17) மாசி மாதம சிவராத்திரி உற்சவத்திற்கு இராத்திரி முழுவதும் முப்பத்திரண்டபிஷேகமும் விசேஷ பூஜைகளும் நடத்துகிறாகள். இதற்கு யோகிகளும் பக்திமான்களும் சுவாமி தெரிசனத்திற்கு வருகிறார்கள்.

(18) பங்குனி மாதம் உத்திரநட்க்ஷத்திரத்திற்கு மகா பூஜைகளும் விசேஷ அபிஷேகங்களும் நடந்து வருகிறது. இதற்கு பிரார்த்தனைக் காரர்கள் சுவாமிக்கு முன்பு நெறகதிரலங்காரம் கட்டுதலும் தவச தானிய கோட்டைகள் கொண்டு வந்து போடுவதும் புது அரிசிப் பொங்கலிடுதலும் செய்கிறார்கள். இதற்கு வேண்டிய ஜனங்கள் சுவாமி தெரிசனத்திற்கு வருகிறார்கள்.

(19) சித்திரைமாதம் வருடப்பிறப்பன்று விசேஷ அபிஷேகமும், விசேஷ பூஜைகளும், செய்து பக்தர்கள் வடமாலை சமர்ப்பித்தும், வருகிறார்கள்.

த்தனைக்காரர்கள் வந்து பொங்கல் செய்தும், அபிஷேக சாமான்கள் கொடுத்தும் அபிஷேகஞ் செய்யச் சொல்லியும் தெரிசனஞ் செய்குகிறார்கள்.

(20) வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தன்று பாலாபிஷேகமும் அக்கினி நட்சேஷத்திர சாந்தபூஜைகளும் செய்கிறார்கள் இத்திருநாள் வைதீக உற்சவமென்று சகல ஜனங்களும் விரத நியமனத்துடன் வந்திருந்து சுவாமி தரிசனஞ் செய்குகிறார்கள்.

(21) ஆனி மாதம் பௌர்ணமி பூசையாதலாலன்று அபிஷேக பூசைகளும் விஷேச அபிஷேகங்களும் நடத்துகிறார்கள். இதற்கு பிரார்த்தனைக்காரக ஏராளமான ஜனங்கள் வந்து சவாமி தெரிசனஞ் செய்கிறார்கள்.

(22) மாதந்தோறும் வருகிற கார்த்திகையிலும், அமாவாசையிலும் பௌர்ணமியிலும், சோமவாரஞ் சுக்கிரவாரங்களிலும் விசேஷச அபிஷேகமும் மகா பூஜைகளும், நடத்துகிறார்கள். இந்தக்காலங்களிலும், பக்த ஜனங்க ளநேகம் விரதானுஷ்டானத்து சுவாமி தெரிசனஞ் செய்கிறார்கள்.

(23) நித்திய பூஜை அநுதினமும் அபிஷேகமும் மூன்றுகால பூஜையும் திருத்தளிகை நைவேத்தியமும் நாத பூஜையும் நடத்துகிறார்களாகையால் தினந்தோறும் பத்து ஜெனங்களுக்குக் குறையாமல் வந்து தெரிசனஞ் செய்கிறார்கள்.

(24) இந்த சுவாமி கோவிலுக்கு முன்பு ஸ்தானீகராகவும் சாமியாராகவுமிருந்த முன்னோர்கள் காலத்தில் சிலகாலம் பூஜை நடந்தும் நடக்காமலுமிருந்ததாக தெரிகிறது. இப்போது தற்காலம் சுவாமி கோவிலுக்கு பட்டம் பெற்று ஸ்தானீகராயிருக்கிற ஸ்ரீலஸ்ரீகுழந்தையானந்த சுவாமிகள் மலைமேலேயே தம்மடத்திலிருந்து கொண்டு அந்தந்த பூஜாகாலங்களில் பூஜை நடத்துவதற்கு பூஜை செய்வோர்களையும் அங்கு தானே லருக்கும்படி சாகை அமைத்துக் கொடுத்து, மூன்று கால பூஜைகளும் அபிஷேகங்களும் தளிகை பிரசாதங்களும் யாதொரு குறைவும் வராதபடி நடத்துகிறார்கள். அன்னியில் விசேஷதினங்களின் பூஜைகளையும் மாதாமாதப் பூஜைகளையும் பெரிய உற்சவகாலப் பூஜைகளையும் வெகு விமரிசையாய் நடத்தி வருகிறார், ஆகையால் எப்பொழு

ம் மலைப்பளிஞர்களும் சந்நிதியிலேயே வசித்து வருகிறார்கள்.

172905

(25) மலையடிவாரந் தாணிப் பாறை முதல் சுந்தரலிங்கசுவாமி கோவில் வரை துஷ்ட மிருகங்களாலும், துஷ்ட ஜெனங்களாலும் யாதொரு பயமுங் கிடையாது.

(26) ஷை மலைமேல் ஆடி அமாவாசை மகோற்சவத்திலும் புரட்டாசி மாத நவராத்திரி உற்சவ காலங்களிலும் வேண்டிய சாமான்கள் வாங்கிக்கொள்ள அநேக விற்பனைக்கடைகள் வந்திருக்கும். இந்த இரண்டு உற்சவகாலங்கள் நீங்கலாக மற்ற தினங்களில் சாமான் விற்குங் கடைகள் கிடையாது. மற்ற மாதங்களில் சுவாமி தெரிசனத்திற்குப் போகிறவர்கள் சுவாமிக்கு வேண்டிய சாமான்களும் தனக்கு வேண்டிய சாமான்களும் சேகரித்துக் கொண்டு போகிறார்கள்.

O23:9a 2455M

(27) இந்த சதுரகிரியில் பதினெண்சித்தர்களும் வாசஞ்செய்வதாகத் தெரிகிறது ஏனெனில் ஒவ்வொரு மகரிஷிகள் வனங்களுமிருக்கிறது அந்த வன

ங்களின் பேரும் அந்தந்த இடங்களும் ஆங்காங்கு இருக்கிற கற்பங்களும் குகைகளும் அதன் மகத்துவங்களும்; இந்த ஸ்தலத்தின் பெருமைகளும் புராணத்தில் வெளியாய் சொல்லப்பெற்றிருக்கிறது அது யேட்டுப்பிரதியிலிருந்து யெழுதி தயாராகிறது கூடிய சீக்கிரத்தில் அச்சிட்டு வெளிவரும்.

(28) அன்னியில் சுந்தரமகாலிங்கர் கோவிலுக்கு கிழக்கே ஒருமையில் தூரத்திற்கப்பாலே கயிலாசக்கானலும் அதன் பக்கத்தில் மகாவிஷ்ணுபுரங்கானலும் அதன்கிழக்கே பிர்மபுரங்கானலும் வெள்ளைபிள்ளையார் சுப்பிரமணியர் சன்னதியு மிருக்கிறதாகத்தெரிகிறது அன்னியில் அதன் நேர் கிழக்கே மூணுமயிலுக்கப்பால் ஏமபுரங்கான லிருப்பதாகவும் அதற்குள் சென்றவர்கள் திரும்பி வாமுடியாதென்றும் மகாகொடுமையான செந்துக்கள் அதில் வாசஞ்செய்து கொண்டிருப்பதாகவுர் தெரிகிறது.

(29) மகாலிங்கர்சந்நிதிக்குத் தெற்காக சட்டைமுனிவர் சன்னுசிவனமும் அதன் பக்கத்தில் குகையும் தவசுக் குகைப்பாறையு மிருக்கிறதாக தெ

ரிகிறது மகாலிங்க சந்நிதிக்கு வடபாரிசம் காலாங்கி நாதர்வனமும் குகையும் அவராலபூசித்த சந்தனமகா லிங்கமும் மிருக்கிறதாகவும்.

(30) அதற்கு வடகிழக்கு மூலையில் குளிராட்டியும் மகாமகத்துவம் பொருந்திய வசிஷ்டர்வனமும் மிருக்கிறதாகத் தெரிகிறது.

Q23:38:21955M

(31) மகாலிங்கர் சந்நிதிக்கு மேற்காக இராமதேவாவனமும் குகையும் அதன் மேற்காக கோரக்கநாதர்வனமும் அதன் பக்கத்தில் ஆற்றுக்குள் குகையும் கஞ்சாக்கடைந்த குண்டாவும் யெந்நாளும் வற்றாத பொய்கையுமிருக்கிறதாகத் தெரிகிறது.

(32) இம்மலையின் சரித்திரங்களையும் விசேஷத்துவங்களையும் ஒவ்வொரு வனச் சிறப்புகளையும் விசேஷ மூலிகை யுற்பத்திகளையும் பழைய ஏட்டுப்பிரதிகளிலிருந்து எடுத்தெழுதி இனியச்சிட்டு வரப்போகும் (சதுரகிரிப்புராணத்தில்)தெளிவாய்க் காணலாம். இனியில் சதுரகிரி வனவாச அம்மானை கூடிய சீக்கிரம் வெளிவரும்.

முற்றுப்பெற்றது.

17295

சற்குருநாதன் துணை.

உ

சுந்தரமகாலிங்க சுவாமிதுணை.

# விளம்பரம்.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரிவி
பதுயாதெனில், மதுரைப் புஸ்தகஷாப் இ. ராம
குருசாமிக்கோனாரிடத்தில் வைத்திய வாத யோ
ஞான சாஸ்திரங்களும், இன்னும் அவரவர்கள் விரு
பும் எப்புஸ்தகங்களும் கிரையத்திற்கு நேரி லு
வி. பி. தபால் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

## இ. ராம. குருசாமிக் கோனார்

புஸ்தகஷாப், புதுமண்டபம,

மதுரை.